# அறிவியல் ஆய்வகத் திறனை மேம்படுத்தும்-வினோத அறிவியல் பணிமனை நிகழ்ச்சி

ஜனவரி 27, 2025 அன்று மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம், நாமக்கல் சார்பாக அறிவியல் ஆய்வகத் திறனை மேம்படுத்தும் திறன்வளர்ச்சி பணிமனை வெற்றிகரமாக வட்டார வள மையம் ராசிபுரத்தில் வைத்து நடைபெற்றது. இப்பணிமனை நாமக்கல் மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவன முதல்வர் முனைவர் மு. செல்வம் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இதில் பங்கேற்ற ஆசிரியர்களுக்கு 15 அறிவியல் உபகரணப் பெட்டிகள் வழங்கப்பட்டன. இப்பணிமனையினை திரு ஏ . சிவபெருமான், முதன்மை கருத்தாளர், DIET நாமக்கல்லின் விரிவுரையாளர் ஏற்பாடு செய்தார். இது அறிவியல் ஆய்வகத் திறனை மேம்படுத்தும் நோக்கில் நடத்தப்பட்ட ஒரு செயலாராய்ச்சி பணிமனைகும். இதில் மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவன விரிவுரையாளர் திரு . செல்லதுரை அவர்கள் பங்கு பெற்று வாழ்த்துரை வழங்கினார்.

அறிவியல் செய்முறை உபகரணப் பெட்டிகளை திரு ஏ . சிவபெருமான் அவர்களின் வழிகாட்டுதலின்படி திரு. அரவிந்த், விங்ஸ் ஆஃப் சயின்ஸ் அகாடமியின் நிறுவனர், அறிவியல் உபகரணப் பெட்டிகளை வடிவமைத்தார்.

இந்த பணிமனையில் வெண்ணந்தூர், நாமகிரிப்பேட்டை நடுநிலைப் பள்ளியைச் சேர்ந்த 15 ஆர்வமுள்ள பட்டதாரி ஆசிரியர்கள் கலந்து கொண்டு பயனடைந்தனர். அவர்கள் அறிவியல் ஆய்வகத் திறனை மேம்படுத்தும் 11 அறிவியல் செய்முறைப் பயிற்சி செயல்பாடுகளை உள்ளடக்கிய அறிவியல் உபகரணப் பெட்டிகளைப் பெற்றனர், ஒவ்வொன்றும் ₹560 மதிப்புள்ள 50 உபகரணங்களை கொண்டுள்ளது. கீழ்க்கண்ட பதினொறு அறிவியலில் செய்முறை தலைப்புகளில் பயிற்சி வழங்கப்பட்டது .1. ஆணி படுக்கை பரிசோதனை, 2.கடத்தல், வெப்பச்சலனம் , கதிர்வீச்சு, 3. இணை மற்றும் தொடர் மின் சுற்று . 4.அணுக்கள் மற்றும் மூலக்கூறுகள் 5. காந்த திசைகாட்டி 6. சிட்ரிக் ஆசிட் மற்றும் பேக்கிங் சோடா, 7. வடிகட்டுதல், 8. எலக்ட்ரோமேக்னெட்டிக் கிரேன் 9.ஹோமோபோலர் மோட்ட ர் 10. சோலார் பேனல், 11. எலுமிச்சை பேட்டரி .இவை அறிவியலில் செய்முறைப் பயிற்சிகளை, அறிவியல் ஆய்வகத் திறனை, மேம்படுத்துவதற்கானவை. ஆசிரியர்கள் இப்போது தங்கள் பள்ளிகளில் இந்த செயல்பாடுகளை கற்பிக்க தயாராக உள்ளனர். சோலார் பேனல் சூரிய ஆற்றல் மாற்றம், எலக்ட்ரோமேக்னெட்டிசம் மற்றும் ஹோமோபோலார் மோட்டார் போன்ற மின்காந்தவியல் சார்ந்த செய்முறை பரிசோதனை பணிமனை முதன்முதலாக நாமக்கல் ஆசிரியர்களுக்கு பயிற்சி வழங்கப்பட்டது.

ஆசிரியர்களுக்கு எதிர்கால விஞ்ஞானிகளை ஊக்குவிக்க தேவையான திறன்களை இப்பணிமனை வழங்குகிறது எனவும், இப்பணிமனை மாணவர்களின் ஆர்வத்தை ஊக்குவிக்கும் இந்த முயற்சி, மாநிலத்தில் அறிவியல் கல்வியை மேம்படுத்துவதற்கான முக்கியமான ஒரு படி எனவும் நாமக்கல் மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவன முதல்வர் முனைவர் மு. செல்வம் அவர்கள் இப்பணிமனைப் பற்றி பற்றி கூறினார்.


BRC
SCIENCE WORKSHOP